இனிமையான குழந்தைகளே! நினைவு என்ற உயரமான ஏணியில் பாபாவிடம் உண்மையான அன்பிருக்கும் போது தான் ஏற முடியும். நினைவின் ஓட்டத்தால் மட்டுமே வெற்றி மாலையில் வருவீர்கள்.

கேள்வி: ஒரு பாபாவிடம் உண்மையான அன்பிருந்தால் அதனுடைய அடையாளம் என்னவாகத் தெரியும்?

பதில்: உண்மையான அன்பு ஒரு தந்தையிடம் இருந்தால் பழைய உலகம், பழைய சரீரத்தின் மீதுள்ள அன்பு அழிந்து போகும். உயிருடன் வாழ்ந்து கொண்டே இறத்தல் தான் அன்பின் அடையாளமாகும். பாபாவைத் தவிர யார் மீதும் அன்பு இருக்கக் கூடாது. புத்தியில் இப்போது வீட்டிற்குப் போக வேண்டும் என்பது நினைவிருக்கட்டும். இது நம்முடைய கடைசி பிறவி ஆகும். குழந்தைகளே நீங்கள் 84 பிறவிகளின் விளையாட்டை முடித்து விட்டீர்கள். இப்போது அனைத்தையும் மறந்து என்னை நினையுங்கள். நான் உங்களை உடன் அழைத்துச் செல்கிறேன் என பாபா கூறுகின்றார்.

பாடல்: கண்ணா, ...........

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான செல்லமான குழந்தைகள் இந்த பாடலைக் கேட்டீர்கள். இது பொய்யான உலகம் ஆகும். பொய்யான கண்டம் என்று பாரதத்தை தான் கூறுகிறோம். ஒவ்வொருவருக்கும் அவரவர் பிறப்பிடத்தின் நினைவு இருக்கிறது. இப்போது நமக்கு இந்த பொய்யான கண்டத்துடன் எந்த சம்மந்தமும் இல்லை. ஏனென்றால், இதில் நிறைய துக்கம் இருக்கிறது என குழந்தைகள் கூறுகிறார்கள். இப்போது சுகத்தின் பெயர் அடையாளம் இல்லை. பொய்யான உலகத்தின் ஆயுள். இப்போது மிகவும் குறைவாக இருக்கிறது. இது கடைசி பிறவி ஆகும். இதற்குப் பொய்யான கண்டம், மரண உலகம் என்று பெயர். அது அமர உலகம் ஆகும். மரண உலகத்தில் காலன் சாப்பிடுகிறான். (அழைக்கிறான்) பிறகு மறுபிறவி பொய்யான உலகத்தில் தான் எடுக்கிறார்கள். இப்போது நாம் 84 பிறவிகளை முடித்து விட்டோம். இந்த உலகத்தோடு நமக்கு எந்த உறவும் இல்லை என குழந்தைகள் அறிகிறார்கள். பாபா அழைத்துச் செல்வதற்காக வந்திருக் கிறார் என்றால் இந்த பழைய உலகத்தோடு நமக்கு எந்த தொடர்பும் இல்லை. பாபாவுடன் அன்பு இணைந்திருக்கிறது என்றால் ஆஸ்தியும் உங்களுக்குக் கிடைக்கிறது. மற்றபடி யாதவர்கள் கௌரவர்களுக்கு விபரீத புத்தி என்பதால் தந்தையை அறியவில்லை. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு ஒரு தந்தை யுடன் அன்பான புத்தி இருக்கிறது. இல்லறத்தில் இருங்கள், தந்தையை நினையுங்கள் என பாபா கூறுகின்றார். இப்போது அனைத்து நடிகர்களின் பாகமும் முடிவடைகிறது. அனைவரும் சரீரத்தை விட வேண்டும். அனை வரையும் வீட்டிற்கு அழைத்துப் போக வேண்டும். மனிதர்கள் இறக்க விரும்புவதில்லை. நீங்கள் உயிரோடு வாழ்ந்திருக்கும் போதே இறந்து விட்டீர்கள். இந்த உலகத்தில் யாருடனும் அன்பில்லை. இந்த சரீரத்தின் மீதும் அன்பில்லை. ஆத்மாவிற்கு வெளிச்சம் கிடைத்திருக்கிறது. நாம் பாபாவின் குழந்தைகள். நம்முடைய 84 பிறவிகள் இப்போது முடிந்து விட்டது. இந்த விளையாட்டு முடிந்து விட்டது. நாம் தான் தேவதையாக இருந்தோம். பிறகு சத்திரியர், வைசியர், சூத்திரன் ஆகிறோம். இப்போது நாம் மீண்டும் பிராமணன்

ஆகியிருக்கிறோம். இந்த சக்கரத்தை முழுமையாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உண்மையில் மறுபிறவி எடுத்து எடுத்து இப்போது இது கடைசி பிறவி என ஆத்மா கூறுகிறது. தந்தை அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கிறார். பல முறை நாம் 84 பிறவிகளின் சக்கரத்தில் வந்திருக்கிறோம். சுயதரிசன சக்கரதாரி ஆகிறீர்கள் அல்லவா? நாம் 84 பிறவிகளின்

சக்கரத்தில் வந்திருக்கிறோம் என புரிய வைக்கப்படுகிறது. அனைத்து பாரத வாசிகளும். 84 பிறவிகள் எடுப்பதில்லை. பிராமணன் ஆக மாறக்கூடியவர்கள் தான் புரிந்துக் கொள்கிறார் கள். குழந்தைகளே, நீங்கள் உங்களுடைய பிறவிகளைப் பற்றி அறியவில்லை என் 5000 வருடத்திற்கு முன்பே புரிய வைக்கப்பட்டிருக்கிறது. 84 இலட்சம் ஜென்மங்கள் பற்றி யாரும் வர்ணனை செய்ய முடியாது

இப்போது உங்களுக்கு அனைத்து தர்மங்களின் சக்கரத்தைப் பற்றியும் தெரிந்து விட்டது. கணக்கு வழக்கில் புத்திசாலியாக இருப்பவர்கள் உடனடியாக புரிந்துக் கொள்வார் கள். உண்மையில் இந்த தர்மத்தினர் இத்தனை பிறவிகள் எடுக்க வேண்டும் என்றுள்ளது. நாம் முழுமையாக 84 பிறவிகள் முடித்து விட்டோம் என்பது முழு நிச்சயம் உங்களுக்கு உள்ளது. இப்போது பாபா அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கிறார். அதற்காகத் தான் இந்த மகாபாரத போர் என்பதில் உங்களுக்கு முழு நிச்சயம் இருக்கிறது. அவர்கள் அனை வருக்கும் வினாச காலத்தில் விபரீத புத்தியாகும். வினாச காரியம் கலியுகத்தின் கடைசியில் சத்யுத்தின் ஆரம்ப மாகிய சங்கமத்தில் நடக்கிறது. சத்யுகம் மற்றும் திரேதாவின் சங்கமத்தை வினாச காலம் என்று கூற முடியாது. அங்கே வளர்ச்சி அடைந்துக் கொண்டே இருக்கிறார் கள். இப்போது அனைத்தும் வினாசம் ஆக வேண்டும். இதற்கு வினாசகாலம் என்று பெயர். இது உங்களுடைய கடைசி பிறவி ஆகும். இதற்கு முன்பு தந்தை வந்திருந்தாலும் இது உங்களின் கடைசி பிறவி என்று கூற முடியாது. விளையாட்டு முடியும் போது தான் நான் வருகிறேன். உண்மையில் ஆத்மாக்களாகிய நாம் 84 பிறவிகள் எடுக்கிறோம் என நீங்கள் அறிகிறீர்கள். குமாரி என்றால் 21 குலத்தினை காப்பாற்றக் கூடியவர்கள் என பாடப் பட்டிருக் கிறது. இப்போது 21 குலம் என்று எதைக் கூறுகிறோம் என அவர்கள் புரிந்துக் கொள்ளவில்லை. பாரதத்தில் குமாரிகளுக்கு மிகுந்த மதிப்பு இருக்கிறது. பூஜிக்கிறார்கள் ஜகதம்பா கூட குமாரி அல்லவா? குமாரியை ஜகதம்பா என்று கூறுகிறோம் என்றால் அதற்கும் பொருள் வேண்டும் அல்லவா? ஜகதம்பா இருக்கிறார் என்றால் ஜகத் பிதாவும் வேண்டும் அல்லவா? ஜகத் பிதாவுடன் மாதாவும் வேண்டும். இவ்வாறு பல தாய்மார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜகத் மாதா என்று பெயர். ஒரு மாதாவை ஜகத் மாதா என எழுதப்பட்டிருந்தது- செய்தித்தாட்களில் கூட வந்தது. இப்போது ஜகத் என்றால் முழு சிருஷ்டி. ஆகவே, ஜகத்திற்கு தாய் ஒருவரா அல்லது 10-20 பேர் இருப்பார்களா? படைக்கக் கூடியவர் தந்தை ஒருவர் தான் என்றால், தாயும் ஒருவர் வேண்டும் அல்லவா? இத்தனை தாய்மார்கள் அனைவரும் ஜகத்திற்கு அதிபதியாக இருக்கிறார்கள். ஜகத்திற்கு தாய் ஜகதம்பா ஒருவர் அல்லவா! எனவே, இப்போது ஒரு சிவபாபாவிடம் தான் குழந்தைகளாகிய உங்களின் அன்பு இருக்கிறது. உங்களிலும் முழு அன்பு என்பது வரிசைக் கிரமத்தில் இருக் கிறது. பிரிய தர்ஷினிகளுக்கு ஒரு பிரியதர்ஷன் அல்லவா! குழந்தைகளுக்கு ஒரு தந்தையுடன் அன்பிருக்க

வேண்டும், மற்ற அனைத்திலிருந்தும் அன்பை துண்டிக்க வேண்டும். பற்றுதலிலிருந்து விடுபட வேண்டும். பழைய உலகத்தில் இருந்து, மோகத் திலிருந்து விடுபட வேண்டும். வீடு பழையதானதும் அப்பா புதியதாக உருவாக்குகிறார். புதியது உருவாகியதும் அதில் உட்கார்ந்துக் கொண்டு பழையதை அழித்து விடுகிறார்கள். நான் உங்களுக்காக புதிய உலகம் சொர்க்கத்தைப் படைக்கிறேன் என பாபா கூறுகிறார். புதிய உலகத்தில் புதிய டெல்லி இருக்கிறது. இதுவே யமுனை ஆற்றங்கரை ஆகும். அங்கே நீங்கள் இராஜ்யம் செய்கிறீர்கள். பக்தி மிகவும் விஸ்தாரமானது என அறிகிறீர்கள். ஞானம் முற்றிலும் சிறியதாகும்- ஒரு நொடியினுடையது. விதையைப் புரிந்துக் கொள்வதால் முழு மரமும் வந்து விடுகிறது. விதவிதமான தர்மங்களின் மரமாகும். அதில் முக்கியமான அடித்தளம் தேவி தேவதா தர்மம் ஆகும். அரைக் கல்பத்தில் ஒரு தர்மத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. மீதம் அரைக் கல்பத்தில் எத்தனை தர்மங்கள் உருவாகிறது பாருங்கள். பரம்பிதா பரமாத்மா பிரம்மா வாய் மூலமாக தேவதா தர்மம், சத்திரிய தர்மத்தை உருவாக்குகிறார் என கூறப் படுகிறது. நீங்கள் தான் பிராமணர்கள் உங்களில் கூட சிலர் சூரிய வம்சத் தினராகவும் சிலர் சந்திர வம்சத்தினராகவும் மாறுகிறார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்தது பிராமண தர்மம் ஆகும். பாரத வாசிகள் தங்களின் தர்மத்தைப் பற்றியே அறியவில்லை. தர்மம் சக்தி வாய்ந்தது என கூறப்படுகிறது. இப்போது பாபா தர்மத்தை ஸ்தாபனை செய்கிறார் என்றால் நீங்கள் பாபாவிட மிருந்து எவ்வளவு சக்திகள் அடைகிறீர்கள். பாபாவினுடையவராக மாறியதால், சர்வ சக்திவான் பாபா தான் குழந்தைகளை யோகத்தினால் சக்திசாலி ஆக்குகிறார். பாபா எவ்வளவு குப்தமாக இருக்கிறார். அவருக்கென்று சரீரம் இல்லை. சர்வ சக்திவான் என்று அழைக்கப்படுகிறார் என்றால் நிச்சயமாக சக்தி கொடுப்பார் அல்லவா? உங்களுடைய பெயர் தான் சிவ சக்திகள், சிவனிடமிருந்து சக்தியை அடையக் கூடியவர்கள். நரகத்தை சொர்க்கமாக மாற்றுகிறீர்கள். உங்களுக்கு இந்த பலம் கிடைக்கிறது! யோக பலத்தால் நீங்கள் இராவணனை வெற்றி அடைகிறீர்கள். இப்போது சர்வ சக்திவான் பாபாவிடமிருந்து முயற்சிக்கு ஏற்ப உங்களுக்கு அன்பு கிடைக்கிறது. அநேகம் பேர் மிகவும் விபரீத புத்தியாக இருக்கிறார்கள். ஏனென்றால் நினைப்பதில்லை. யார் மிகவும் நினைக்கிறார்களோ அவர் களுக்குத் தான் அன்பு புத்தியாகும். சிறிதளவு அன்பிருக்கிறது என்றால் புரிந்துக் கொள்ளுங்கள் நினைப்பதில்லை, என்ன செய்வது...... என்கிறார்கள் அடிக்கடி மறந்து போகிறார்கள்...... அட, பிரியதர்ஷனை நீங்கள் நினைக்க முடியாதா? யாரிடமிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறதோ அந்த தந்தையை நினைக்க முடியாதா? காரணம் சொல்லுங்கள். குழந்தை, தந்தையை நினைக்க முடியவில்லை என்று கூறுகிறது. அட, பிறகு ஆஸ்தி எப்படி கிடைக்கும்? பாபாவை நினைக்கும் அளவிற்கு சக்தி கிடைக்கிறது? சிவபாபாவையும் நினையுங்கள். மேலும் முகத்தில் கரியையும் பூசிக் கொண்டிருந்தால், (விகாரத்தில் செல்வது) பிறகு இராஜ்ய பாக்கியம் கிடைக்காது. பாபா, நாங்கள் மறந்து போகிறோம், வாடிப்போகின்றோம் என்கிறார்கள். நீங்கள் ஈஸ்வரனுடைய வாரிசாகி இருக்கிறீர் கள். உங்களுக்கு நிறைய போதை ஏற வேண்டும் என பாபா கூறுகிறார் இப்படிப்பட்ட தந்தையை நிரந்தரமாக நினைக்க வேண்டும். அன்பு புத்தி உடையவராக வேண்டும். சிவபாபாவிடம் அன்பில்லை என்றால் பிரம்மாவிடம் கூட இல்லை. அவர்கள் இப்படி தான் அனைவருடனும் சண்டையிட்டுக் கொண்டே இருப்பார்கள். தொடர்பே இல்லை என்றால்

ஆஸ்தியை எப்படி அடைய முடியும்? இறைவனின் வானம்பாடி ஆக முடியாது. வானம்பாடி ஆக வேண்டும் அல்லவா? பாபாவிடம் இறை வானம்பாடி இருக்கின்றனர், மைனாக்கள் கூட இருக்கின்றனர், கிளி கூட இருக்கின்றது, சிலர் பல நிறங்களை உடைய வராகவும் இருக்கிறார் கள் அனைவருடனும் சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். பிறகு சிலர் புறாவாக இருக்கிறார்கள். அவர்கள் சத்தம் போட முடியாது. தோட்டத்தில் வித விதமான மலர்கள் மலர்கின்றன.. ஒவ்வொருவரும் நான் எப்படிப்பட்ட மலர் என தனக்குத் தானே கேட்டுக் கொள்ளுங்கள். ரோஜா மலரா? அல்லது ஆன்மீக ரோஜாவா? நான் மம்மா பாபாவைப் போல சேவை செய்கிறேனா? இந்த ஸ்ரீ நாராயணன் அல்லது ஸ்ரீ லஷ்மியை மணக்க முடியுமா? இவ்வாறு தனக்குள் நான் எவ்வளவு தந்தையை நினைக் கிறேன் என கேளுங்கள். எவ்வளவு சேவை செய்கிறேன். பாபாவிடமிருந்து நிச்சயமாக ஆஸ்தி அடைய வேண்டும். நிராகார் பரம்பிதா பரமாத்மா பாரதத்தில் வந்திருக்கிறார். நிச்சயமாக பாரதத்தை சொர்க்கமாக மாற்றி யிருப்பார். நிச்சயமாக சிவபாபா வந்திருக்கும் போது தான் சத்யுகத்தை உருவாக்குகிறார் அல்லவா? சிவஜெயந்தி கொண்டாடுகிறார்கள். சிவனுடைய பிறப்பிடமும் இதுவே. மேலும் கிருஷ்ணருடைய பிறப்பிடமும் இதுவே. கிருஷ்ணனின் ஜெயந்தியை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள். சிவஜெயந்திக்கு விடுமுறை கூட அளிப்பதில்லை. இருட்டு நகரம் அல்லவா? இங்கே மக்கள் மீது மக்களாட்சி ஆகும். இராஜா இராணியின் இராஜ்யம் இருக்க வேண்டும். டிராமா படி இல்லை.

பாரதம் தூய்மையான ராஜஸ்தான் ஆகி விடும் என அறிகிறீர்கள். எனவே அவர்களை எழுப்ப வேண்டும். மீண்டும் தெய்வீக ராஜஸ்தான் ஸ்தாபனை ஆகிறது. இப்போது அசுர ராஜஸ்தான் ஆகிவிட்டது. முதலில் பாரத வாசிகள் தூய்மையாக இருந்தனர். இப்போது தூய்மை இல்லாமல் ஆகி விட்டனர். எனவே தான் மக்கள் அவர்களின் பூஜை செய்கிறார் கள். இப்போதோ ராஜஸ்தானாக இல்லை. நீங்கள் கடிதம் எழுதலாம். மேலும் செய்தித்தாளில் கூட போடலாம். அதாவது 5000 வருடத்திற்கு முன்பு தெய்வீக ராஜஸ்தான் இருந்தது. இப்போது இல்லை. இப்போது நீங்களே ஈஸ்வரிய சகோதர சகோதரிகள். நீங்கள் மிகச் சிலரே! இராமர் போனால் என்ன, இராவணன் போனால் என்ன...... பாடப்படு கிறது. மற்ற படி நமக்கு மிகக் குறைந்த நேரமே இருக்கிறது என புரிந்துக் கொள்ள வேண்டும். தந்தை யிடமிருந்து ஆஸ்தியை அடைந்துக் கொண்டிருக்கிறீர்கள். கூடவே எதிர்காலத்தைப் பற்றியும் சிந்தியுங்கள். இந்த தொழிலையும் செய்யுங்கள். சரீர நிர்வாகத்தையும் செய்யுங்கள். இது எதிர் காலத்தினுடைய தாகும். இதில் உழைப்பு ஒன்றும் இல்லை. முற்றிலும் எளிதாகும். ஒரு நொடியில் 21 பிறவிகளுக்கு ஜீவன்முக்தி கிடைக்கிறது. பாபாவையும் சக்கரத்தையும் நினைக்க வேண்டும். பாபாவை நினைப்பதால் தான் தூய்மையாக மாறலாம். தூய்மை இல்லாதவர்கள் தூய்மையாக முடியாது. நிறைய தண்டைனைகள் அடைய வேண்டி யிருக்கும். இப்போது தான் வினாச காலம் ஆகும். யாதவர் மற்றும் கௌரவர்களுக்கு விபரீத புத்தி ஆகும். பாண்டவர்களுடையது அன்பு புத்தியாக இருந்தது. அதற்கு தான் வெற்றி கிடைத்தது. இப்போது அதே நேரம் ஆகும். இப்போது வீட்டிற்குப் போக வேண்டும் என்பதை மட்டும் நினைவில் வையுங்கள் என பாபா கூறுகிறார். இப்போது சிறிது நேரம் இருக்கிறது. நாடகம் முடியப்போகிறது. இல்லறத்தில் இருந்துக் கொண்டே பாபாவை மட்டும் நினைக்க வேண்டும். நினைவு தான்

நீண்ட ஏணிப்படி யாகும். ருத்ர மாலையில் வர வேண்டும். பிறகு பரிசு கிடைக்கும். இராஜ்ய பாக்கியத்தை அடைய வேண்டும் அதற்காக விசார சாகர மந்தனம் செய்ய வேண்டும் இதுவே புத்தி யோகத்தின் யாத்திரை ஆகும். பாபாவிடம் ஓட வேண்டும். முழு நாளும் எவ்வளவு நினைத்தோம் என பாருங்கள். எவ்வளவு பேரை முள்ளிலிருந்து மலராக்கினோம், பிரஜைகளை உருவாக்கவில்லை என்றால் யார் மீது ஆட்சி செய்வீர்கள். ஆகவே, முதலில் 8 முக்கியமானவர் கள் உருவாகிறார்கள். பிறகு 108, பிறகு 16108 ஆகிறார்கள். நிச்சயம் இது வளர்ச்சி அடைந்துக் கொண்டே இருக்கும் என விவேகம் கூறுகிறது. இராஜ்யம் விரிவாகிக் கொண்டே போகும். இப்போது கூட நிறைய லட்சகணக்கானோர் வருவார்கள். இப்போது நாம் வீட்டிற்குப் போக வேண்டும் என்பதை புத்தியில் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த பழைய உலகத்தில் துக்கம் நிறைய இருக்கிறது. ஒரு பாபாவை நினைத்துக் கொண்டே இருங்கள். இது மிகவும் நீண்ட பயணம் ஆகும். கடைசியில் வரக் கூடியவர்கள். இவ்வளவு உயர்ந்த பதவி அடைய முடியாது. எவ்வளவு உழைக்க வேண்டியிருக்கிறது. கர்ம போகம் எவ்வளவு வருகிறது. கடைசியில் வரக்கூடியவர்கள் விகர்மங்களை அழிக்கும் அளவிற்கு இவ்வளவு கடினமாக எப்படி உழைக்க முடியும்? ஜனகர் கூட திரேதாவில் சென்று விட்டார். சூரிய வம்சத்தின் ராஜா ஆக முடியவில்லை. ராஜாவாக இருந்தார். அர்ப்பணம் ஆனார். ஆனால், தாமதமாக வந்ததால் சந்திர வம்சத்தில் சென்று விட்டார். இந்த விஷயங்களை பிராமணர்கள் தான் புரிந்துக் கொள்ள முடியும். சூத்திரர்கள் புரிந்துக் கொள்ள முடியாது. ஆம், பலருக்கு தூய்மை நன்றாக இருக்கிறது. ஆனால் தூய்மையாக வாழ்ந்துக் காட்ட வேண்டும் அல்லவா? சன்னியாசிகளின் சீடர் என்கிறார்கள். தன்னை தூய்மையாக மாற்றிக் கொள்ள வில்லை என்றால் சீடர்கள் என எப்படிக் கூற முடியும்? இதுவும் பொய் அல்லவா? எந்த சத்சங்கத் திலும் குறிக்கோள் இல்லை. எவ்வளவு நிறைய சத்சங்கம் இருக்கிறது. தந்தை தான் வந்து மனிதர்களை தேவதையாக மாற்றுகிறார். ஒரு சிவபாபாவின் நினைவினால் நீங்கள் உலகத் திற்கே அதிபதியாகிறீர்கள். தந்தையை நினைக்கவே இல்லை என்றால் சொத்து எப்படி கிடைக்கும்? முயற்சி செய்து நிரந்தரமாக நினைப்பது உங்களின் வேலையாகும். நிரந்தரமாக நினைவிருக்க வேண்டும். அந்த நிலை கடைசியில் ஏற்படும். இப்போது இல்லை. கடைசியில் 8 பேர் தான் வெற்றி அடைகிறார்கள். நினைவு செய்து செய்து எல்லோரையும் விட முதலில் போவார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்குத் தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. வினாச காலத்தின் நேரம் என்பதால் தேகதாரிகளிடமிருந்து அன்பைத் துண்டித்து ஒரு தந்தையிடம் உண்மையான அன்பு வைக்க வேண்டும். இந்த பழைய வீட்டிலிருந்து பற்றுதலை நீக்கி விட வேண்டும்.

2. ஞானத்தின் வானம்பாடியாகி தனக்குச் சமமாக முட்களை மலராக்கும் சேவை செய்ய வேண்டும். நினைவு என்ற ஓட்டப் பந்தயத்தில் ஓட வேண்டும்.

வரதானம் அனைத்து தகுதிகள் உடையவர் ஆவதன் மூலம் தன்னை

: மதிப்புமிக்கவராகவும் மாற்றக்கூடிய கவலையற்ற மகாராஜா ஆகுக.

சுயம் பாபாவே குழந்தைகளுக்கு ஆபர் (சலுகை) தருகிறார் - குழந்தைகளே தகுதி யுடைய வலது கரமாக ஆகுங்கள், தகுதியுடைய சேவாதாரி ஆகுங்கள். யார் தகுதியுடைய வராக இருக்கிறார்களோ, அவர்கள் கவலையற்ற மகாராஜாவாக இருப்பார்கள். உலகிய தகுதிகள், ஞானத்தின் தகுதிகள் தான் மனிதனை மதிப்புயுடையவராக மாற்றுகிறது. தகுதிகள் இல்லை யென்றால் மதிப்பும் இருப்பதில்லை. ஆன்மீக சேவைக்கு தகுதிகள் அனைத்தையும் விட பெரியதாக இருக்கிறது.. அப்படிப்பட்ட தகுதியுடைய ஆத்மாவிற்கு எந்தவொரு விஷயமும் தடுத்த நிறுத்த முடியாது. தகுதியுடையவர் ஆவது என்றால் எனக்கு ஒரு பாபாவை தவிர வேறுயாருமில்லை. வேறு எந்த விஷயமும் புத்தியில் இருக்க கூடாது

சுலோகன்: ஒரே இரசனை என்ற மனநிலையை அனுபவம் செய்ய வேண்டுமென்றால் ஒரு பாபா மூலம் அனைத்து விதமான இரசனைகளையும் அனுபவம் செய்யுங்கள்.